# தான் விழுந்த குழியில் பிறரையும் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, உயர்கல்வி அமைச்சின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் விழுந்த குழியில்
பிறரையும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 1999

ISBN-955-18-0016-15

அச்சுப்பதிப்பு:

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
130 சீ, பாகொட வீதி, பிட்டகோட்டை,
பானலுவ, பாதுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மாணவ பரம்பரையினரைத்தவறான வழியில், இட்டுச்செல்லும் பல்லாயிரம் வகையிலான தூண்டுதல்களில் போதைப் பொருட்கள் இன்று முக்கியத்துவம் பெறுகின்றன. போதைப் பொருட்களினால் எமது இளைஞர் பரம்பரையினருக்கு ஏற்படக்கூடிய அழிவுகளிலிருந்து அவர்களை மீளச் செய்யும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அதிகளவில் செயற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் எதிர்காலச் சந்ததியினரின் மகிழ்ச்சியும் எழுச்சியும் தடைப்பட்டுவிடுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

புகைபிடித்தல். மதுபானம் உட்படப் போதைப்பொருட் பாவனை மிகவும் குறைந்ததான நிலையில் உள்ள ஓர் உலகை உருவாக்கும் நோக்கில் பாடசாலை மாணவரிடையே சிறந்த பழக்கங்கள் பற்றிய அறிவு, மனப்பாங்கு என்பனவற்றை வளர்ப்பதில் கல்வி, உயர்கல்வி அமைச்சின் போதைப்பொருட் தவிர்ப்பு ஆலோசனைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சிறுவர்களுக்கான இவ்வுபதேசக்கதை நூல் எமது பாடசாலைச் சிறுவர் சிறுமியர்களுக்குப் "தான் விழுந்த குழியில் பிறரையும்..." என்ற இந்நூல் தான் புகைத்தல், போதைப்பொடி, மற்றும் மதுபானம் என்பனவற்றையும் அவற்றிலிருந்து தவிர்த்து நடப்பதற்கான வழிவகைகளையும் மிகத் தெளிவாக விளக்குகின்றது. இதன் உட்பொருள் போதைப்பொருட் தவிர்ப்பு ஆலோசனைக் குழுவின் கருத்தாக விளங்குகிறது. சிறுவர் மனங்களைக் கவரக்கூடிய வகையில் கட்டுரைகளைத் தயாரித்தமைக்காக மதுபானம் போதைப் பொருள் தகவல் நிலையத்தைச் சேர்ந்த நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் திருமதி குமாரி வெல்கெதரவுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவ்வாறே, பிரதியைத் தயாரித்தல், சித்திரங்கள், புற அட்டை கணனிப்பக்கங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காகப் போதைப்பொருட் தகவல் நிலையத்தினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இச் சிறு நூலை மிக அழகான வடிவில் அச்சிட்டு வழங்கியமைக்காக இலங்கை அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கும் பல்வேறுவகையில் ஆலோசனைகளை வழங்கி இம் முயற்சி சிறந்த ஓர் ஆக்கமாக வெளிவருவதற்கு உதவிய சகலருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

ஏ. அன்றா டி சில்வா
கல்வி, உயர்கல்வி
அமைச்சின் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாங்கள் எந்த நாளும் மகிழ்ச்சியில்

மகிழ்ச்சியுடன் வாழ்வதே எமது வாழ்வின் எதிர்பார்ப்பாகும். புகைபிடித்தல், மதுபானம் போன்ற ஏனைய போதைப்பொருட்கள் அந்த மகிழ்ச்சிக்குத் தடையாக உள்ளன. ஆகவேதான் நாம் அவற்றிக்கு அகப்படாதிருக்கவேண்டும்.

அதற்காக நாம் என்ன செய்யவேண்டும் ?

புகைபிடித்தல், மதுபானம், போதைப்பொருட்களைப் பற்றிய உண்மை நிலையை அறியவேண்டும்.

அதற்காக இந்நூல் உங்களுக்குப் பயன்படும்.



***இவ்விடயங்களை அறிந்துகொள்வதால் எமது வாழ்வு எந்நாளும் மகிழ்ச்சியாக இருக்கும் !***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹ! நாமா அவைகளுக்கு அகப்படுவோம் !

: இப்போது அதிகமானோர் சிகரட், சாராயம் குடிப்பதில்லை. அது ஏன் என்று தெரியுமா?

: ஐயோ அது சின்ன விடயம். ஏன் என்று எனக்குத் தெரியும். சந்தோசமாக இருக்க எல்லோருக்கும் விருப்பம்! அதனாலேதான் மக்கள் சிகரட், சாராயம் குடிப்பதில்லை.

: அப்படியென்றால் சிகரட், சாராயம் குடிப்பவர்களுக்கு...........

- ❖ நண்பர்கள் சிரிப்பார்கள்........!
- ❖ வீட்டிலுள்ளவர்கள் விரும்பமாட்டார்கள்........!
- ❖ நல்ல உடலாரோக்கியத்துடன் வாழமுடியாது.......!
- ❖ அதனால் வாழ்க்கையே எல்லைப்படும் அல்லவா .......!

அப்ப......மகிழ்ச்சியாய் இருப்பது எப்படி !!



***சிகரட், சாராயம் குடிக்காதவர்களுக்கு மேலே குறிப்பிட்ட பாதிப்புகள் எதுவும் ஏற்படாது என்று நண்பர்களுக்குக் கூறுவோம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லை / தடையில்லாத மகிழ்ச்சி.....!

: மகிழ்ச்சி தடைப்படுவது என்றால் என்ன நிமல்?



: சுனில், நான் அதற்கு நல்ல உதாரணம் கூறவா?

: எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு அண்ணன் இருக்கிறார். திரைப்படம் பார்க்கப்போனாலும், சுற்றுலா போனாலும் அவரால் கைவிடமுடியாத அத்தியாவசியமான ஒன்று உண்டு.

: அது என்ன நிமல் ?

: எங்குசென்றாலும் அவருக்கு சிகரட், சாராயம் வேண்டும்.

: அப்ப அந்தத் திரைப்படத்திலும், சுற்றுலாவிலும் கிடைக்கும் மகிழ்ச்சியை, புகை பிடிப்பதும் மதுபானமும் இல்லாமல் போனால் அவரால் பெற முடியாது.

: அவருடைய வாழ்வில் மகிழ்ச்சி தடைப்பட்டுள்ளது என்பது உங்களுக்கு இப்போது புரிகிறதல்லவா?

: ஏன் எங்களுடைய மாமாவுக்கும் சிகரட் இல்லாமல் மலசலம் கழிக்க முடியாது.



: ஆகா...ஆகா.. அது நல்ல கதை. மாமாவால் இலவசமாக மலசலம் இப்ப கழிக்க முடியாதா? வேறு யாருடையதுமல்ல, எமது கருத்துக்களிலிருந்து தான் நாம் விடுதலை பெற வேண்டும்.

: நண்பர்களுடன் உண்டு குடித்து, பாட்டுப்பாடி, ஆடி மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய இடத்திலும், சாராயம், சிகரட் இல்லையென்பதால் மகிழ்ச்சி இல்லையென்று கூறுவது மகிழ்ச்சி தடைப்பட்டுள்ளது என்பதையே.

***இதை நாங்கள் ஜகன் இடமும் சொல்ல வேண்டும் ஜகனுக்கு விளங்குவது சற்று குறைவு என்பதனால் அகப்பட்டு இருக்கிறார் இதுபற்றி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெரிய கரைச்சலாய் இருக்கு !






மற்றவர்களுக்கு உபத்திரவமாக இருந்து பயனில்லை. அப்படி இருப்பது கீழ்த்தரமான செயலாகும்.

போற, போற இடங்களிலை மக்களின்ரை முகம் கறுத்துப்போகுது

**இதற்குப் பிறகு நாம் சிகரட், சாராயம் பியர் குடித்து விட்டு மற்றவர்களுக்குக் கஷ்டம் கொடுப்பவர்களைக் கண்டால் மற்றவர்களுக்குக் கஷ்டம் கொடுப்பது சரியில்லையென்று பயமில்லாமல் கூறுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நண்பர்கள் சிரித்தால்........?

: ஐயோ இப்படிக் கீழ்த்தரமாக இருப்பதைவிட நல்லம்.........
அங்கு பாருங்கோ அந்தப் பிள்ளைகள் மூக்கைப் பொத்திக்கொண்டு இருக்கிறமாதிரியை !



: சிகரட் பிடிப்பது கீழ்த்தரமான வேலை என்று விளங்குகிறது தானே...

: சாராயம் குடிப்பவர்களும் இதேபோலத்தான்.

: இல்லாவிட்டால்.......... போதாகுறைக்கு பணத்தைக்கொடுத்து இந்த நிலைமையை தேடிக் கொள்வது என்றால்.....

இதை எங்களுடைய வகுப்பு மாணவர்களுக்கும் சொல்லுவோம்.

***அதிகமானோர் தம்மைப்பார்த்துச் சிரிக்கிறார்கள் என்பது சிகரட், சாராயம் குடிப்பவர்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே அவர்களுக்கு இந்த உண்மையைக் கூறுவோம்.***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உருவமும் நல்லது வேலையும் நல்லது....!

: எப்பிடி உங்கள ! நான் நல்லாய் வரைந்திருக்கிறன்தானே ?

: இப்ப நாங்கள் எங்கட உருவத்தையும், வேலையையும் குறித்துக் காட்டுவம் நிமல் சரியா ....... ?




: சரி இப்ப நாங்கள் எழுதுவோம் இது எங்கள் வேலையும், உருவமும் என்று.

*உண்மைதான், நாங்கள் அதை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பணம் இருந்தால்.......

: இந்தச் சுவரொட்டியில் என்ன இருக்கிறதென்று பாருங்கள்.



நாங்கள் இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

இப்படிக் கொள்ளையடிப்பதை நாம் எதிர்க்கிறோம்.

உண்ணவும் உடுக்கவும் இல்லை.....

சுற்றுலா செல்லவும் பணம் இல்லை

வாழ்க்கை மிகவும் கஷ்டமாயுள்ளது.

உண்மையான சந்தோசத்தைப் பெற இந்த வாழ்வை நாம் மாற்றியமைக்க வேண்டும்.

அந்தச் சிகரட்டை நீக்கினால் சரிதானே ?

: நல்ல திறமான எண்ணம்தான்...... நாங்களும் இதைப்போல ஒன்றை வரைந்து பாடசாலையில் ஒட்டுவம்.



: நிமல்.... எங்கட மாமாவும் இப்படித்தான். பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுக்கவும் காசில்லை என்று இருக்கிறார். ஆனால் சிகரட் சாராயத்துக்கு ஒரு நாளைக்கு 80/- அளவில் போகுதாம்.

உண்மையில் அநியாயமாய் செயவழிக்கும் காசை எங்களிடம் தந்தால் என்னவெல்லாம் செய்யலாம் தானே.

அந்தப் பணத்தில் ஒருநாளைக்கு ஒரு ரூபா சேர்த்தாலும் எல்லாவீட்டிலையும் சேர்த்து ஒரு மாதத்துக்கு 30/- வீதம் சேர்க்கலாம்தானே....!

**சாராயத்திற்காக கிராமத்தில் இருந்து வெளியேறும் பணத்தில் ஒரு பகுதியையாவது எமது பாடசாலைக்காக பெற்றுக்கொள்வது எப்படி என்று அதிபருடன் கதைப்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று....

சிலர் சுற்றுலா சென்றால் பியர் குடிப்பது ஏன் ?

சந்தோஷமாக இருக்கத்தானே.

அப்ப, பியர் குடித்தால் சந்தோசமாய் இருக்கமுடியுமானால், ஏன் சுற்றுலா போகவேண்டும்?

ஏன் என்று எங்களுக்கு விளங்கவில்லை!

விருந்துகளில் சாராயம், பியர் குடிப்பது சந்தோசமாயிருக்கலாம் என்று அப்படித்தானே ?

அதிசயம் என்னவெற்றால் சந்தோசமாக இருக்க சாராயம் பியர் குடிப்பது எப்படியும் சந்தோஷமாக உள்ள இடத்தில் தான்.

இதற்குப்பிறகு எப்படியும் சந்தோசமாய் இருக்கும் இடங்களில் சாராயம், பியர் குடித்து அதன் மூலந்தான் சந்தோசம் வரும் என்று கூறுபவர்களை நாம் கண்டால் மற்றவர்களுக்கும் காட்டவேண்டும்.

அவர்கள் ஏமாந்து இருக்கிற மாதிரி !

எப்படியும் சந்தோசமாக இருக்கும் சூழலில் சாராயம் குடித்துவிட்டு, சாராயத்தால் தான் சந்தோசம் கிடைத்தது என்று கூறுவது பச்சப்பொய்யாகும் !

***இதற்குப்பின் நாம் எங்கு சென்றாலும் சாராயம் குடிப்பவர்கள் ஏமாந்து இருக்கின்ற நிலையினை நன்றாக பார்ப்போம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொய்களுக்கிடையில் பெரிய பொய்

எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள அண்ணா பியர் குடிப்பது சந்தோசத்துக்காகவாம். ?

எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள மாமா சாராயம் குடிப்பது உடல் களைப்பிற்காகவாம். !

புதுமையான அதிசயம் என்னவெற்றால் அந்த மாமா கவலையை மறக்க என்று சாராயம் குடிக்கிறாராம்!

இவ்வளவையும் செய்யுமளவிற்கு உண்மையிலேயே மது அவ்வளவு சக்திவாய்ந்ததா ?

பைத்தியமா ?

சராயத்தால் இவை ஒன்றுமே செய்யமுடியாது. இவை எல்லாம் வெறும் பொய்தான்,

குடிக்கும் மருந்தினுள் ஒருவருக்கும் தெரியாதவாறு அதேயளவு சாராயத்தைக் கலந்து கொடுப்பதாக வைத்துக்கொள்வோம்.

அந்த மருந்தைக் குடித்தால் அந்த அண்ணனுக்கு சந்தோசம் கிடைக்காது.

மாமாவால் கவலையை மறக்கமுடியாது !

சாராயம் என்று அறிந்து கொண்டு குடித்தால் தான் இவையெல்லாம் நடக்கிறது.

மாமாதான் சாராயம் குடித்துவிட்டு பழைய கோபங்களை ஞாபகப்படுத்தி பக்கத்து வீட்டுகாரர்களுடன் சண்டைக்கு போவது. ஆனால் நண்பர்களுடன் குடிக்கும் பொழுது கூறுவது பிரச்சினைகளை மறக்க என்று.

மதுவினால் மகிழ்ச்சி கிடைக்கிறது, கவலை மறைகிறது, பிரச்சினையை மறக்கப்படுகிறது என்ற எல்லாமே உண்மையா என்பதை வகுப்பில் கலந்துரையாடுவோம்.

***மதுபானம் மகிழ்ச்சியைத் தருகிறது, கவலையை இல்லாமல் போக்குகிறது, பிரச்சினையை மறக்கடிக்கிறது என்று சொல்பவர்கள் உலகிலேயுள்ள பெரிய பொய்யர்களாகும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தான் விழுந்த படுகுழியில் மற்றவர்களையும் விழ வைத்தல்.

பகல் வெள்ளியைக் கண்டுள்ளீர்களா ?

ஏன் யாராவது காட்டினார்களா ?

இல்லை நான்தான் கண்டேன்.

நான் நேற்று பக்கத்து வீட்டு அண்ணனின் வீட்டுக்குப் போன பொழுது அவரது நண்பர்கள் அங்கே வந்திருந்தனர்.

அவர்களது தம்பட்டமான பேச்சுக்களை (நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.) இடையில் ஒருவர் சொன்னார்....

"ஐயோ அப்படி ஒரு சுற்றுலா என்றால் மறுபடியும் போகமாட்டேன்" என்று

ஒரு பக்கமாகப் போயிருந்து சரியான கசப்பான பியரைக் குடித்ததேயல்லாமல் வேறெந்தவொரு சந்தோசமும் இருக்கவில்லை.

"அப்படிச் சொல்லுவார் என்று நான் நினைத்தேன்"

மூளையிருக்கும் (புத்தியுள்ள) எவருக்கும் அது விளங்கும் தானே.

சொல்லி முடியுமட்டும் கொஞ்சம் இருங்களேன்.

அப்ப அண்ணன் சொல்லுறார் "பியர் குடிச்சுப்பழக்கமில்லை. அதனாலதான் அப்பிடி என்டு"

நீங்கள் பெண்பிள்ளைகள் மாதிரி பயந்தவர்களாக இருந்தால் சரிவருமா? அதுவா? இதுவா?
இனி கடைசியில் என்ன நடந்தது தெரியுமா?

பக்கத்திலை இருக்கும் அண்ணன் அந்த உண்மையைச் சொல்ல அவரைவிடவேயில்லை.

**சாராயம் இல்லாமல் இருக்க முடியாதவர்கள் மற்றவர்களையும் நிம்மதியாக இருக்க விடுவதில்லை,மற்றவர்கள் இவர்களுக்குப் பயந்து சத்தம் இல்லாம் இருக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பட்டிக்காட்டானுக்கு வித்தை (மெஜிக்)

உஷ்... உஷ்... சத்தம்போட வேண்டாம்....!

என்ன பாக்கிறீங்கள் ?

சாராயம் குடிக்கும் விதத்தைப் பாக்கிறன் !

சியஸ் என்று கிளாசைக் கிளாசோடை முட்டி குடிக்கிற விதம் எப்படி ?...

சாராயம் குடிப்பதாகச் சொல்வதில்லையே !

அதற்குத் தண்ணி அடித்தல் என்று கூறுவர்.

வாயைச் சுழிச்சுக்கொண்டு கஷ்டப்பட்டு சாராயத்தை விழுங்குவர் ஆனால் ஏதோ.

பெரிய தொன்று செய்வதாகவே எமக்குக் காட்டுகின்றனர்.

வாந்தியெடுக்கும் போது கூட அதை வாந்தியெடுப்பதென்று சொல்வதில்லை.

அதற்கும் வேறு வார்த்தைகளைப் பாவிக்கின்றனர்.

இப்படிப்பட்ட பொய்யான வார்த்தைகளாலும், நடிப்பாலும் கஷ்டமானநிலையை மறைக்கின்றனர்.

இப்படிப்பட்ட பொய்யான வேலைதான் சிலருக்கு வித்தைபோன்று தெரிகின்றது.

***ஹா....! அதுதானே சாராயம் குடிப்பவர்கள் எங்களிடம் சொல்வதையும் செய்வதையும் கண்டவுடன் எமக்குச் சிரிப்பு வருகிறது தானே ......?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகைத்தல் விளம்பரமென்னும் ஏமாற்றுக் கலை.

(நிமலுக்குப் பின்னால் மற்றொருவர் ஓடிவருகிறார்)



: இஞ்சை... இஞ்சை....

: கொஞ்சம் இதைக் கண்டீங்களா.

: ஐயோ நல்லாய் கண்டிருக்கிறன்

: என்ன என்ரை முகமா?

: என்ர முகமில்லை சிகரட்விளம்பரம்.

: இதைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள்

: என்னத்தை நினைக்க ?

இப்படிப் பொய் சொல்லித்தான் இவர்கள் எங்களைப் பிடிக்கப் போகிறார்கள்.

இஞ்சை பாருங்கோ... நல்ல ருசி, 50 வருட அனுபவம்.... இது என்னபொய்

இப்படியானவர்கள் இருப்பது கஷ்டத்தில்.

கடைகள் மாத்திரம் அல்ல, படங்கள், நாடகங்களிலும் இல்லாத அழகானவர்களை பயன்படுத்தி சிகரட் குடிப்பதைப் போல காட்டி மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறார்கள்.

இருந்தாலும் எப்படியாவது எங்களுக்கு சிகரட் புகைக்க வைத்தால் யாருக்கு லாபம்...!

ஆனாலும் அதற்கு நாங்கள் ஏமாந்த காலம் முடிந்துவிட்டது. எங்கள் வகுப்பிலுள்ள திறமையற்ற பிள்ளை கூட இதற்கு அகப்படுமா என்பது சந்தேகம்.

**எப்படியாவது எங்களை சிகரட் குடிக்கவைத்தால் யாருக்கு லாபம் ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேற்றுநீரில் மீன்பிடிக்க முடியாது

இஞ்சை... இண்டைக்கு எங்கடை வீட்டுக்கு வாறீங்களா மச் பாப்பம்....

இண்டைக்கு இந்தியா தானே விளையாடுது.....



: அப்பாடா..... ஆறு......... அடியெண்டால் அதான் அடி

: அங்கை பாருங்கோ சுற்றிவர இருக்கிறது சிகரட், சாராயம், விளம்பரங்கள் !

: அவைகள் தான் விளையாட்டு வீரர்களைவிட கூடுதலாக தெரிகிறது இவைகளும் கம்பனியின் தந்திரோ பாயங்கள் தான் விளங்குகிறதா...?

: விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்ல, கல்விசம்பந்தமான போட்டிகளிலும், கலாசார

: விழாக்கள் அனைத்திலும் சாராயம், சிகரட் கம்பனிகள் தான் கைப்பற்றுகின்றன.

**எமது விளையாட்டுச் சங்கங்களில் உள்ளவர்கள் இப்படிப்பட்டவைகள் நடக்கின்றன என்பதை அறிய வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவர்கள் இப்படிப்பட்டவைகளுக்குப் பணம் செலவழிப்பது எங்கள் மேல் வைத்துள்ள அன்பினால் அல்ல! தமது பொருட்களுக்கு விளம்பரத்தைத் தேடவே. ஆனால் அவர்கள் சொல்லிக் கொள்வது அனுசரணை தருவதாகவே.

இவற்றை ஆ.எ. யில் காட்டுவது இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது தானே....!

அது என்றால் நல்லதுதான்......ஆனால்

எங்களுடைய தொலைக்காட்சி நாடகங்கள் திரைப்படங்களில் சிகரட், சாராயம் குடிக்கும் விதத்தைப் பாருங்களேன்....

இவைகள் எல்லாம் இயல்பாக நடப்பவைகள் அல்ல....

வேண்டுமென்றே புகுத்தப்பட்டவைகள் தான் அதிகமாக உள்ளன.

விளம்பரங்கள் தடைசெய்யப்பட்டவுடன், தொலைக்காட்சி நாடகங்களிலும் சிகரட், சாராயம் பற்றிய காட்சிகளை தடை செய்கிறார்கள் இல்லை. இப்படித்தான் விளம்பர தந்திரோபாயங்கள் கொண்டு செல்லப்படுகிறது.

**விளம்பரங்களைத் தடைசெய்வது மட்டுமல்ல, மறைமுகமாகச் செய்யும் இப்படிப்பட்ட பிரசாரங்களையும் தடைசெய்யவேண்டுமென்று எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்வோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹெரோயின் சம்பந்தமான போலிக் கதைகள்.

: இந்தா... மற்றவைகளைப்போலில்லை, ஹெரோயின் என்றால் பயங்கரமானதல்லவா?

: அது ஏன் ?

: அம்மா... ஹெரோயின் குடிப்பவர்கள் இரத்தத்தைக் காண ஆசைப்படுவார்களாம் உடம்பெல்லாம் கீறிக் கிழிப்பார்களாம். சுவரெல்லாம் ஏறுவார்களாம். புதினமான வேலைகள் அல்லவா செய்கிறார்கள்.

: அப்படிச் செய்வதை நீங்கள் யாராவது கண்டிருக்கிறீர்களா ?

: இல்லை... இல்லை.... காணவில்லை.

: அப்படியென்றால் எப்படி இவை உங்களுக்குத் தெரியம்.

: எல்லோரும் சொல்வதால் நாங்களும் சொல்கிறோம்.

: யாரும் சொன்னதற்காக அதை நம்பவேண்டாம்.

: உண்மை அதுவல்ல எங்கடை வீட்டுப்பக்கம் தூள் குடிப்பவர்கள் கனபேர் இருக்கிறார்கள்.

: அவர்கள் ஒருவரும் அப்படிச் செய்வதில்லை. ஆனால் அதற்கு அடிமையாகின படியால் தொடர்ந்து குடிக்கிறார்கள்.

: தூள்குடிப்பவர்கள் சுவரில் ஏறி நடப்பதில்லையா?

: அப்படிச் செய்பவர்கள் இருக்கக்கூடும் இருந்தாலும் ஹெரோயின் குடிப்பதால் அல்ல.

: சாராயம் குடிப்பதால் ஒவ்வொருமாதிரி நடக்குமென நினைத்துக்கொண்டிருப்பதால் ஹெரோயின் குடித்தாலும் அதைபோல் நடக்கின்றது.

: உண்மையாகவா? ஓம்... ஹெரோயினில் இருக்கும் இரசாயனப் பொருட்களை ஆஸ்பத்திரியிலும் எமக்குத் தருகிறார்களே ! இருந்தாலும் அங்கே சுவருக்கு மேலே ஏறி நடப்பதில்லை. ஆனால் ஹெரோயின் என்று அறிந்ததும் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இனி நாங்கள் எல்லோருமாய் சேர்ந்து ஒரு வேலைசெய்வோம்.

நண்பர்கள் ஒன்றுகூடினால் சந்தோசமாய் இருக்கும். சேர்ந்து செய்ய எவ்வளவோ வேலைகள் உண்டு.

இதைப்போல



இந்தப் புத்தகத்தில் இருக்கும் சுவரொட்டியை கீறி ஒட்டுவோம்.

பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடுக்கலாம்.

வகுப்பிலுள்ள நண்பர்களுக்கும், பந்தடிக்க வரும் நண்பர்களுக்கும் ரியுசன் வகுப்புக்கு வரும் நண்பர்களுக்கும் இதைப் பற்றிச் சொல்லலாம்.

வகுப்பு ரீச்சரிடம், சேரிடம் இதைப்பற்றிக் கலந்துரையாடலாம்.

**இருபத்தோறாம் நூற்றாண்டை புகைத்தல், மதுபானம், போதைப்பொருட்களிலிருந்து விடுபட்ட சமுதாயத்தின் மூலம் ஆரம்பிக்க நாம் தயாராகுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN—955—18—0016—15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org